NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 21 April 2021

# இளம் சிங்கப்பூர்வாசிகளுக்கு நீரிழிவு அறிகுறிகள் பற்றி அதிக புரிதல் இல்லை: ஆய்வு

ஐந்தில் நான்குக்கும் அதிகமான விகிதத்தில் சிங்கப்பூர்வாசிகள், அதாவது 83.5 விழுக்காட்டினர் நீரிழிவின் அறிகுறிகளைச் சரியாக அடையாளம் காண முடிந்தாலும் இளம் வயதினருக்கு அந்த நிலையின் அறிகுறிகள் குறித்த சரியான புரிதல் இல்லை என்று பல பொதுச் சுகாதாரக் கழகங்கள் நடத்திய ஆய்வின் முடிவு தெரிவிக்கிறது.

நீரிழிவுப் பிரச்சினையின் அறிகுறிகள் குறித்து 18 முதல் 34 வயதுக்குட்பட்டவர்களைவிட இருமடங்கு புரிதலுடன் 35, அதற்கும் அதிக வயதுடையவர்கள் இருப்பதாக நேற்று வெளியான அந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

நீரிழிவு அறிகுறிகள் பற்றி இளம் வயதினர் தெரிந்துகொள்ளாமல் இருப்பது மிகவும் அக்கறைக்குரியது எனவும் அதனைச் சரியாகக் கையாள வேண்டும் எனவும் மனநலக் கழகத்தின் மருத்துவக் குழு (ஆய்வு) துணைத்தலைவர் பேராசிரியர் சோங் சியோ ஆன் குறிப்பிட்டார். இந்த ஆய்வின் முதன்மை ஆய்வாளரும் அவரே.

வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கவழக்கங்களை நல்லமுறையில் பின்பற்றினால் நீரிழிவுப் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க முடியும் என்பதால் இளம் வயதினருக்கு இதுகுறித்து தெரிந்திருக்க வேண்டியது முக்கியம் என்றார் அவர்.

ஆய்வில் பங்கேற்ற மலாய் இனத்தவர், பெண்கள், நீரிழிவு பிரச்சினை இருப்பவர்கள் போன்றோர் சீனர்கள், ஆண்கள், நீரிழிவு பிரச்சினை இல்லாதவர்கள் போன்றவர்களைவிட அதிக அளவில் நீரிழிவு குறித்து தெரியக்கூடியவர்களாக இருந்ததும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

மனநலக் கழகம், கூ டெக் புவாட் மருத்துவமனை, தேசிய சுகாதாரக் குழும பலதுறை மருந்தகங்கள், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சோ சுவீ ஹோக் பொதுச் சுகாதாரப் பள்ளி ஆகியவை இணைந்து 2018ஆம் ஆண்டில் தொடங்கிய ஆய்வில் 18 வயதுக்கு மேற்பட்ட 2,895 சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள் பங்கேற்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.